DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 523/2025

Miscellaneous :

Sessions : PW 4

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | இளங்கோவன் |
| Father / Husband Name | லட்சுமணன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 11.06.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஒரத்தி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் கடந்த 2025 ம் ஆண்டு பணிபுரிந்த உதவி ஆய்வாளர் மாணிக்கம் மற்றும் பூபாலன் ஆகியோரின் கையொப்பம் மற்றும் விசாரணை நடைமுறைகள் எனக்கு நன்கு தெரியும். உதவி ஆய்வாளர் மாணிக்கம் பணி ஓய்வு பெற்றுவிட்டதால் நான் வழக்கின் ஆவணங்களை பார்வையிட்டு வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 14.03.2025 ம் தேதி உதவி ஆய்வாளர் மாணிக்கம் நிலைய பொறுப்பில் இருந்த போது முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள் நோயாளியாக சிகிசையில் இருந்த ஆனந்தன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.38/2025 பிரிவுகள் 296 பி, 115(2), 118(1), 351(3) BNS மற்றும் 4 of TNPHW Act–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (**அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அசாஆ 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

**2.** பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் வரதன் மற்றும் ரமேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(அந்த பார்வை மகசர் அசாஆ 4 ஆகவும் மாதிரி வரைபடம் அசாஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் அன்றைய தினம் 8.15 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் வாதியின் வீட்டின் அருகே இருந்து சுமார் 25 Cm அளவுள்ள புங்கமர கட்டையை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்துள்ளார். **(அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரிகளை தேடிவந்த நிலையில் 16.03.2025 ம் தேதி காலை 8.30 மணிக்கு முருங்கை கிராமம் குலக்கரை

அருகே நின்றிருந்த எதிரிகள் வரதன் மற்றும் கார்த்திக் ஆகியோரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

3. பின்னர் மற்ற எதிரிகளை தேடிவந்த நிலையில் செங்கல்பட்டு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. பின்னர் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சீனுவாசன் என்பவரை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். (**அந்த விபத்துபதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். **(அந்த படிவம் 91 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (அந்த புங்கமர கட்டை அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள்296 பி, 115(2), 118(1), 351(3) BNS மற்றும் 4 of TNPHW Act–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

4. எதிரிகளுக்கு எதிராக கொடுக்கப்பட்ட பொய்யான புகாரை பெற்று எதிரிகளுக்கு எதிராக விசாரணை அதிகாரி தவறான முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. சம்பவயிடம் செல்லாமலும், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும், ஆவணங்கள் அனைத்தும் எங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சான்று பொருள் எதுவும் சம்பவயிடத்தில் வைத்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு எதிராக தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.